பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 03 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** உள்நாட்டு தேவைக்கான சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்குமாறு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

**2.** மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து இத்தாலி அமைச்சருடன் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

**3.** தோஹாவில் சிக்கித் தவித்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள், கடந்த **3** நாட்களில் தாயகம் அனுப்பி வைக்கப்பட்டதாக கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

**4.** பஹ்ரைன், ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் வரும் **12**ஆம் தேதி முதல் **16**ஆம் தேதி வரை நடைபெற இருந்த சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**5.** ஈரான் மற்றும் யுக்ரைனுக்கு எதிரான தாக்குதல் குறித்து ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை நடத்தியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உள்நாட்டு தேவைக்கான சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்குமாறு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

உலக அளவில் தற்போது எழுந்துள்ள சூழலைக் கருத்தில் கொண்டு எரிபொருள் வழங்குவதில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் LPG சிலிண்டர்கள் வழங்குவதில் உள்ள இடையூறுகளைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு இந்த உத்தரவை வெளியிட்டுள்ளது.

மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் வீடுகளுக்கான LPG வழங்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளச்சந்தையில் LPG சிலிண்டர்கள் பதுக்கலை தடுக்கும் வகையில் 25 நாட்கள் இடைவெளியில் சிலிண்டர்கள் பதிவு செய்வதை பெட்ரோலிய அமைச்சகம் அறிமுகப்படுத்தியிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் LPG சிலிண்டர்கள், வீட்டு உபயோகமல்லாத, மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து இத்தாலி அமைச்சருடன் வெளியுறவு அமைச்சர் திரு. **Antonio Tajani** உடன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவது தொடர்பாகவும், சர்வதேச சந்தை நிலவரம் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே புதுதில்லியில் உள்ள அமெரிக்க - இந்திய வர்த்தக கவுன்சில் இயக்குநர்களுடன் திரு. ஜெய்சங்கர் நேற்று கலந்துரையாடினார்.

இதனை பதிவிட்டுள்ள அவர், வர்த்தக துறையினருடன் வெளிப்படையான ஆலோசனை நடத்தியது ஊக்கமளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா - அமெரிக்கா இடையே எதிர்கால பொருளாதார ஒத்துழைப்பு குறித்தும், உலக அளவில் தற்போதைய சூழல் குறித்தும்

விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக திரு. ஜெய்சங்கர் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

மருந்துகள், சுகாதாரம் மற்றும் மருத்துவ தொழில்நுட்பத் துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்க இந்தியாவின் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் வழிவகுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பட்ஜெட்டுக்கு பிந்தைய காணொலிக் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உலக அளவில் இந்தியாவின் வர்த்தக நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்கு மருத்துவத் துறை முக்கியப் பங்கு வகிக்கும் என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த மூன்றரை ஆண்டுகளில் 9 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தோஹாவில் சிக்கித் தவித்த சுமார் ஆயித்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள், கடந்த 3 நாட்களில் விமானங்கள் மூலம் தாயகம் அனுப்பி வைக்கப்பட்டதாக கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

தோஹா - புதுதில்லி இடையே இயக்கப்பட்ட கத்தார் ஏர்வேஸ் மூலம் நேற்று மட்டும் 300 இந்திய பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தூதரகம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது.

தில்லி, மும்பை, கொச்சி ஆகிய நகரங்களுக்கு மேலும் 3 விமானங்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இந்த விமானங்களைப் பயன்படுத்தி இந்தியர்கள் பயணம் மேற்கொள்ளலாம் என்றும் தூதரகத்தின் அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்களின் பயண விவரங்கள் குறித்து விமான நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு இறுதி செய்யுமாறும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

நேபாள நாடாளுமன்ற தேர்தலில் ராஷ்ட்ரிய சுதந்திரா கட்சி அமோக வெற்றி பெற்றிருப்பதற்கு அக்கட்சியின் தலைவர்கள் திரு.

**Rabi Lamichhane,** திரு. **Balendra Shah** ஆகியோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர், நேபாளத்தில் அமையவிருக்கும் புதிய அரசுடன் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்தாக தெரிவித்தார்.

பரஸ்பர முன்னேற்றம், இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய விஷயங்கள் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டு செயல்பாட்டின் மூலம் எதிர்காலத்தில் இந்தியா - நேபாள நாடுகளுக்கு இடையேயான நல்லுறவுகள் புதிய உச்சத்தை எட்டும் என்றும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நேபாள நாடாளுமன்ற தேர்தலில் ராஷ்ட்ரிய ஸ்வதந்திர கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

நேரடியாக வாக்களித்து தேர்வு செய்யப்படும் **164** இடங்களில் **125** இடங்களை அந்தக் கட்சி கைப்பற்றியுள்ளது.

மேலும் விகிதாச்சார அடிப்படையிலான வாக்குப்பதிவில் சுமார் **40** லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை அக்கட்சி பெற்றுள்ளது.

நேபாள காங்கிரஸ் 18 இடங்களிலும், நேபாள கம்யூனிஸ்ட் UML கட்சி 9 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

ராஷ்ட்ரிய சுதந்திரா கட்சியின் மூத்த தலைவரான திரு. பாலேந்திர ஷா பிரதமராக பதவியேற்க உள்ளார்.

நேபாள நாட்டின் வரலாற்றில் மிக குறைந்த வயதிலான பிரதமராக அவர் இருப்பார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் நாளை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் நாளை பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சியில் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பின்னர் திருச்சிராப்பள்ளிக்கு வருகை தரும் திரு. நரேந்திர மோடி, 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைப்பதுடன், புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

அந்த நிகழ்ச்சிகளில் மக்களிடையே பிரதமர் உரையாற்றவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகளில் எழுந்துள்ள சூழலைக் கருத்தில் கொண்டு, அங்கு வரும் 12ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை நடைபெற இருந்த சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அந்த நாடுகளில் தற்போதைய நிலைமையை ஆய்வு செய்து, ஸ்திரமற்ற சூழல் நிலவுவதால், மாணவர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தத்தை கருத்தில் கொண்டு இந்த தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக சி.பி.எஸ்.இ. வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

பஹ்ரைன், ஈரான், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் சி.பி.எஸ்.இ. தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அனைவரையும் உள்ளடக்கிய அனைவருக்கும் கல்வி கிடைக்கக் கூடிய வகையில் தேசிய கல்விக் கொள்கை அமைந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

“அனைவரின் முயற்சியுடன், அனைவருக்குமான வளர்ச்சி” என்ற கருப்பொருளுடன் நடைபெற்ற காணொலிக் கருத்தரங்கில் நிறைவுரையாற்றிய அவர், வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, புதுமைக் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்தக் கருத்தரங்கில் பல்வேறு துறைகளையும் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்று தங்களின் கருத்துகளை தெரிவித்ததற்கு தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவம் அவர் குறிப்பிட்டார்.

பட்ஜெட் அறிவிப்புகளை நடைமுறைப்படுத்துவதில் நிபுணர்களின் ஆலோசனைகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரான் மற்றும் யுக்ரைனுக்கு எதிரான தாக்குதல் குறித்து ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ரஷ்ய அதிபரின் ஆலோசகர் திரு. **Yuri Ushakov,** கடந்த டிசம்பர் மாத த்திற்குப் பின்னர் இரு

தலைவர்களும் சுமார் ஒரு மணி நேரம் தொலைபேசியில் உரையாடியதாகவும், அப்போது ஈரான், யுக்ரைன் நிலவரம் குறித்து விரிவாக ஆலோசித்ததாகவம் கூறினார்.

ஈரான் மீதான தாக்குதலை பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு கொண்டுவந்து விரைவில் சுமூகமான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று அதிபர் திரு. புடின் வலியுறுத்தியதாக அவர் கூறினார்.

யுக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யப் படைகள் வெற்றிகரமாக முன்னேறியது குறித்தும், தற்போதை சூழ்நிலையில் அதன் தாக்கம் குறித்தும் அமெரிக்க அதிபருடன் திரு. புடின் எடுத்துரைத்ததாக அவர் மேலும் கூறினார்.

ஈரானின் முக்கிய கூட்டாளியாக விளங்கும் ரஷ்யாவின் அதிபர், அமெரிக்க அதிபருடன் பேசியிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

<<<<>>>>

ஈரானுக்கு எதிரான தாக்குதலின்போது அமெரிக்க வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக பெண்டகன் தெரிவித்துள்ளது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்ததும் நேரடியாக அமெரிக்க ராணுவத்தில் இணைந்த அந்த வீரர் உயிரிழந்திருப்பதன் மூலம், 7வது ராணுவ வீரரை அமெரிக்கா இழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - ஸ்காட்லாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல் அடித்தன.

**<<<<The End>>>>**